உ
சிவமயம்



அமரர்கள்

# சிவசம்பு சிவபாஸ்கரன்
# சுமித்திரா சிவபாஸ்கரன்

அவர்களின்

சிவபதப்பேறு குறித்த

# நினைவு மலர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



## மந்திரம்

சுக்லாம் ப்ரதரம் விஷ்ணும்
சசிவர்ணம் சதுர்ப்புஜம்
பிரசன்ன வதனம் தியாயேத்
சர்வ விக்நோப சாந்தயே

# நினைவு மலர்

## 26.04.2009

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



*எமது அன்புத் தெய்வங்களின்*
*பாதாரவிந்தங்களுக்கு இந்நூல்*

# சமர்ப்பணம்



எம் வாழ்விற்காய் அயராது உழைத்து, எம் உயர்விற்காய் இமைக்காது எமைக்காத்து, வாழ்க்கையின் ஒவ்வோர்படியிலும் எமை ஏற்றி வாழ்வளித்த எங்கள் தந்தை சிவசம்பு சிவபாஸ்கரன், தாய் சுமித்திரா சிவபாஸ்கரன் அவர்களுக்கு இந்நூல் சமர்ப்பணம்.

*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

**மக்கள், மருமக்கள்**
**பேரப்பிள்ளைகள்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



**பிறப்பு**
**28-12-1932**

அமரர்

**இறப்பு**
**20-03-2009**

# சிவசம்பு சிவபாஸ்கரன்

அவர்களின்

## திதி நிர்ணய வெண்பா

கூடுமொரு சர்வதாரி குலவுதிங்கள் பங்குனியில்
நீடபர பக்கஞ்சேர் நவமியாம் பீடுமிகு
மண்ணுலக வாழ்வொழித்து மகிபன் சிவபாஸ்கரனும்
விண்ணுலகில் வீற்றிருந்த நாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



பிறப்பு
11-08-1937

இறப்பு
26-03-2009

அமரர்

# சுமித்திரா சிவபாஸ்கரன்

அவர்களின்

## திதி நிர்ணய வெண்பா

சர்வதாரிஆண்டு சாரும் பங்குனியாந் திங்கள்
வருதிதியாம் பீறுடைய அமவாசை பெருமைமிகு
அம்புவியில் வாழ்வொழித்து அணங்கு சுமித்திராவும்
நம்பெருமான் தாளடைந்த நாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# பஞ்ச புராணம்

*திருச்சிற்றம்பலம்*

## காப்பு

கஜா னனம் பூத கணாதி ஸேவிதம்
கபித்த ஜம்பு பலஸார பஷிதம்!
உமாஸுதம் சோக விநாச காரணம்
நமாமி விக்னேச்வர பாத பங்கஜம்!

## தேவாரம்

என்ன புண்ணியஞ் செய்தனை
நெஞ்சமே யிருங்கடல் வையத்து
முன்னம் நீபுரி நல்வினைப்
பயனிடை முழுமணித் தரளங்கள்
மன்னு காவிரி சூழ்திரு
வலஞ்சுழி வாணனை வாயாரப்
பன்னி யாதரித் தேத்தியும்
பாடியும் வழிபடும் அதனாலே.

## திருவாசகம்

பால்நினைந்(து) ஊட்டும் தாயினும் சாலப்
பரிந்து நீ பாவியேன் உடைய
ஊனினை உருக்கி உள் ஒளி பெருக்கி
உலப்பிலா ஆனந்தம் ஆய
தேனினைச் சொரிந்து புறம் புறம் திரிந்த
செல்வமே சிவபெருமானே
யான் உனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந்(து) அருளுவ(து) இனியே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவிசைப்பா

கற்றவர் விழுங்குங் கற்பகக் கனியை
கரையிலாக் கருணைமா கடலை
மற்றவர் அறியா மாணிக்க மலையை
மதிப்பவர் மனமணி விளக்கைச்
செற்றவர் புரங்கள் செற்றஎஞ் சிவனைத்
திருவீழி மிழலைவீற் றிருந்த
கொற்றவன் தன்னைக் கண்டுகண் டுள்ளம்
குளிரஎன் கண்குளிர்ந்தனவே.

## திருப்பல்லாண்டு

சீருந் திருவும் பொலியச் சிவலோக
நாயகன் சேவடிக்கீழ்
ஆரும் பெறாத வறிவு பெற்றேன்
பெற்றதார் பெறுவாருலகில்
ஊரு முலகுங் கழற வுழறி
யுமைமண வாளனுக்காட்
பாரும் விசும்பு மறியும் பரிசுநாம்
பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

வேதநெறி தழைத்துஓங்க
மிகுசைவத் துறைவிளங்கப்
பூதபரம் பரைபொலியப்
புனிதவாய் மலர்ந்தழுத
சீதவள வயற்புகலித்
திருஞான சம்பந்தர்
பாதமலர் தலைக்கொண்டு
திருத்தொண்டு பரவுவாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புகழ்

கைத்தல நிறைகனி அப்பமொ டவல்பொரி
கப்பிய கரிமுகன் அடிபேணிக்
கற்றிடும் அடியவர் புத்தியி லுறைபவ
கற்பக எனவினை கடிதேகும்
மத்தமு மதியமும் வைத்திடும் அரன்மகன்
மற்பொரு திரள்புய மதயானை
மத்தள வயிறனை உத்தமி புதல்வனை
மட்டவிழ் மலர்கொடு பணிவேனே
முத்தமி ழடைவினை முற்படு கிரிதனில்
முற்பட எழுதிய முதல்வோனே
முப்புரம் எரிசெய்த அச்சிவ னுறைரதம்
அச்சது பொடிசெய்த அதிதீரா
அத்துய ரதுகொடு சுப்பிர மணிபடும்
அப்புனம் அதனிடை இபமாகி
அக்குற மகளுடன் அச்சிறு முருகனை
அக்கண மணமருள் பெருமாளே.

## வாழ்த்து

வான் முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்க ளோங்க நற்றவம் வேள்விமல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலகமெல்லாம்.

*திருச்சிற்றம்பலம்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விநாயகர் அகவல்

## ஔவைப் பிராட்டியார் அருளியது

*திருச்சிற்றம்பலம்*

சீதக் களபச் செந்தாமரைப்பூம்
பாதச்சிலம்பு பல இசை பாட
பொன் அரைஞாணும் பூந்துகி லாடையும்
வன்ன மருங்கில் வளர்ந்தழகெறிப்பப்
பேழை வயிறும் பெரும் பாரக் கோடும்
வேழ முகமும் விளங்கு சிந்தூரமும்
அஞ்சுகரமும் அங்குச பாசமும்
நெஞ்சிற் குடி கொண்ட நீலமேனியும்
நான்ற வாயும் நாலிரு புயமும்
மூன்று கண்ணும் மும்மதச் சுவடும்
இரண்டு செவியும் இலங்கு பொன் முடியும்
திரண்ட முப்புரிநூல் திகழொளி மார்பும்
சொற்பதம் கடந்த துரிய மெய்ஞ்ஞான
அற்புத னீன்ற கற்பகக் களிறே!
முப்பழம் நுகரும் மூஷிக வாஹன!
இப்பொழு தென்னை ஆட்கொள வேண்டித்
தாயாயெனக்குத் தானெழுந்தருளி
மாயப்பிறவி மயக்க மறுத்துத்
திருந்திய முதல் ஐந்தெழுத்துந் தெளிவாய்ப்
பொருந்தவே வந்தென் உளந்தனிற் புகுந்து
குருவடி வாகிக் குவலயந் தன்னில்
திருவடி வைத்துத் திரமிது பொருளென



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாடா வகைதான் மகிழ்ந்தெனக் கருளிக்
கோடாயுதத்தாற் கொடுவினை களைந்தே
உவட்டா உபதேசம் புகட்டி என் செவியில்
தெவிட்டாத ஞானத்தெளிவையும் காட்டி
ஐம்புலன் தன்னை அடக்கும் உபாயம்
இன்புறு கருணையின் இனிதெனக் கருளி
கருவிகள் ஒடுங்கும் கருத்தினை அறிவித்து
இருவினை தன்னை அறுத்திருள் கடிந்து
தலமொரு நான்கும் தந்தெனக் கருளி
மலமொரு மூன்றின் மயக்கமறுத்தே
ஒன்பது வாயில் ஒரு மந்திரத்தால்
ஐம்புலக் கதவை அடைப்பதுங் காட்டி
ஆறாதாரத் தங்குச நிலையும்
பேறா நிறுத்திப் பேச்சுரை அறுத்தே
இடை பிங்கலையின் எழுத்தறிவித்துக்
கடையிற் சுழுமுனைக் கபாலமும் காட்டி
மூன்று மண்டலத்தின் முட்டிய தூணின்
நான்றெழு பாம்பின் நாவிலுணர்த்திக்
குண்டலி யதனிற் கூடிய அசபை
விண்டெழு மந்திரம் வெளிப்பட உரைத்து
மூலாதாரத்தின் மூண்டெழு கனலைக்
காலாலெழுப்புங் கருத்தறி வித்தே
அமுதநிலையும் ஆதித்தன் இயக்கமும்
குமுத சகாயன் குணத்தையுங் கூறி
இடைச்சக்கரத்தின் ஈரெட்டு நிலையும்
உடற்சக்கரத்தின் உறுப்பையுங் காட்டிச்
சண்முக தூலமும் சதுர்முக சூக்கமும்
எண் முகமாக இனிதெனக் கருளிப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புரியட்ட காயம் புலப்பட எனக்குத்
தெரியெட்டு நிலையும் தெரிசனப்படுத்திக்
கருத்தினிற் கபால வாயில் காட்டி
இருத்திமுத்தி இனிதெனக் கருளி
என்னை அறிவித்து எனக் கருள் செய்து
முன்னை வினையின் முதலைக் களைந்தே
வாக்கும் மனமும் இல்லா மனோலயம்
தேக்கியே எந்தன் சிந்தை தெளிவித்து
இருள்வெளி இரண்டுக்கு ஒன்றிடமென்ன
அருள்தரும் ஆனந்தத்து அழுத்தி என் செவியில்
எல்லையில்லா ஆனந்தம் அளித்து
அல்லல் களைந்தே அருள் வழிகாட்டிச்
சத்தத்தினுள்ளே சதாசிவங் காட்டிச்
சித்தத்தினுள்ளே சிவலிங்கங் காட்டி
அணுவிற்கணுவாய் அப்பாலுக் கப்பாலாய்
கணுமுற்றி நின்ற கரும்புள்ளே காட்டி
வேடமும் நீறும் விளங்க நிறுத்திக்
கூடுமெய்த் தொண்டர் குழாத்துடன் கூட்டி
அஞ்சக் கரத்தின் அரும் பொருள் தன்னை
நெஞ்சக் கருத்தின் நிலையறிவித்துத்
தத்துவ நிலையைத் தந்தெனையாண்ட
வித்தக! விநாயக! விரைகழல் சரணே!

*திருச்சிற்றம்பலம்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காரிய சித்தி மாலை

*திருச்சிற்றம்பலம்*

பந்தம் அகற்றும் அனந்த குணப்
பரப்பும் எவன்பால் உதிக்குமோ
எந்த உலகும் எவனிடத்தில்
ஈண்டி ருந்து கரக்குமோ
சந்தமறை ஆகமங்கலைகள்
அனைத்தும் எவன்பால் தகவருமோ
அந்த இறையாம் கணபதியை
அன்பு கூரத்தொழுகின்றோம் 01

உலகம் முழுதும் நீக்கமற
ஒன்றாய் நிற்கும் பொருளெவனவ்
வுலகில் பிறக்கும் விகாரங்கள்
உறாதமேலாம் ஒளியாவன்
உலகம் புரியும் வினைப்பயனை
ஊட்டும் களைக்கண் எவன்
அந்த உலகமுதலாம் கணபதியை
உவந்தே சரணம் அடைகின்றோம். 02

இடர்கள் முழுதும் எவனருளால்
எரிவீழும் பஞ் செனமாயும்
தொடரும் உயிர்கள் எவனருளால்
சுரர்வாழ் பதியும் உறச் செய்யும்
கடவுள் முதலோர்க்கூறின்றிக்
கருமம் எவனால் முடிவுறும் அத்
தடவு மருப்புக் கணபதிபொன்
சரணம் சரணம் அடைகின்றோம். 03



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூர்த்தி ஆகித் தலமாகி
முந்நீர் கங்கை முதலான
தீர்த்தம் ஆகி அறிந்தறியாத்
திறத்தினாலும் உயிர்க்குநலம்
ஆர்த்தி நாளும் அறியாமை
அகற்றி அறிவிப்பான் எவன் அப்
போர்த்த கருணைக் கணபதியைப்
புகழ்ந்து சரணம் அடைகின்றோம். 04

செய்யும் வினையின் முதல் யாவன்
செய்யப் படும் அப்பொருள் யாவன்
ஐயம் இன்றி உளதாகும்
அந்தக் கருமப் பயன்யாவன்
உய்யும் வினையின் பயன்விளைவில்
ஊட்டி விடுப்பான் எவன் அந்தப்
பொய்யில் இறையைக் கணபதியைப்
புரிந்து சரணம் அடைகின்றோம். 05

வேதம் அளந்தும் அறிவரிய
விகிர்தன் யாவன் விழுத்தகைய
வேதமுடிவில் நடம்நவிலும்
விமலன் யாவன் விளங்குபர
நாதமுடிவில் வீற்றிருக்கும்
நாதன் எவன்எண் குணன் எவன்அப்
போத முதலைக் கணபதியைப்
புகழ்ந்து சரணம் அடைகின்றோம். 06

மண்ணின் ஓர்ஐங் குணமாகி
வதிவான் எவன்நீர் இடைநான்காய்
நண்ணி அமர்வான் எவன்தீயின்
மூன்றாய் நவில்வான் எவன் வளியின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்ணும் இரண்டும் குணமாகி
இயைவான் எவன்வான் இடைஒன்றாம்
அண்ணல் எவன் அக்கணபதியை
அன்பால் சரணம் அடைகின்றோம். 07

பாச அறிவில் பசு அறிவில்
பற்றற் கரிய பரன்யாவன்
பாச அறிவில் பசு அறிவும்
பயிலப் பணிக்கும் அரன்யாவன்
பாச அறிவும் பசு அறிவும்
பாற்றி மேலாம் அறிவான
தேசன் எவன் அக் கணபதியைத்
திகழச் சரணம் அடைகின்றோம். 08

*திருச்சிற்றம்பலம்*

## கைமேல் பலன்கள்

இந்தக் காரியசித்தி மாலையை எவன் 3 தினங்கள் தொடர்ந்து ஒருநாளில் 3 வேளைகள் பாடுகின்றானோ அவன் எச்செயலை தொடங்கினாலும் வெற்றி பெறுவான். 8 தினங்கள் பாடினால் மனம் மகிழ மங்கள நிகழ்ச்சிகள் தொடரும். விநாயக சதுர்த்தி அன்று 8 முறை பாடினால் மீண்டும் மீண்டும் பிறவாத வரம் கிடைக்கும் ஒவ்வொரு நாளும் எட்டுமுறை ஓதுகின்றவன் அட்டமா சித்திகளைப் பெற்றுப் பெரும் பேறடைவான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவபுராணம்

*திருச்சிற்றம்பலம்*

நமச்சிவாய வாஅழ்க! நாதன் தாள் வாழ்க!
இமைப்பொழுதும் என் நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க
கோகழி யாண்ட குருமணி தன் தாள்வாழ்க!
ஆகமமாகி நின்றண்ணிப்பான் தாள்வாழ்க!
ஏகன் அனேகன் இறைவன் அடிவாழ்க

வேகங் கெடுத்தாண்ட வேந்தனடி வெல்க
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்றன் பெய்கழல்கள் வெல்க!
புறத்தார்க்குச் சேயோன்றன் பூங்கழல்கள் வெல்க!
கரங்குவிவார் உள்மகிழுங் கோன்கழல்கள் வெல்க!
சிரங்குவிவார் ஓங்குவிக்குஞ் சீரோன் கழல் வெல்க!

ஈசனடி போற்றி எந்தை அடி போற்றி!
தேசனடி போற்றி சிவன் சேவடி போற்றி!
நேயத்தே நின்ற நிமலனடி போற்றி!
மாயப்பிறப்பறுக்கும் மன்னனடி போற்றி!
சீரார் பெருந்துறை நம் தேவனடி போற்றி!

ஆராத இன்பம் அருளு மலை போற்றி
சிவன் அவன் என் சிந்தையுள் நின்ற அதனால்
அவனருளாலே அவன் தாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுராணம் தன்னை
முந்தை வினைமுழுதும் ஓய உரைப்பன்யான்

கண் நுதலான்தன் கருணைக் கண் காட்ட வந்தெய்தி
எண்ணுதற்கெட்டா எழிலார் கழல் இறைஞ்சி
விண் நிறைந்து மண் நிறைந்து மிக்காய் விளங்கொளியாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்ணிறந்து எல்லை இலாதானே நின் பெருஞ்சீர்
பொல்லா வினையேன் புகழுமாறு ஒன்றறியேன்

புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல் விருகமாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுரராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்ற இத்தாவர சங்கமத்துள்

எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்
மெய்யே உன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்
உய்ய என் உள்ளத்துள் ஓங்காரமாய் நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா என ஓங்கி ஆழ்ந்தகன்ற நுண்ணியனே

வெய்யாய் தணியாய் இயமானனாம் விமலா
பொய்யாயின எல்லாம் போயகல வந்தருளி
மெய்ஞ்ஞானமாகி மிளிர்கின்ற மெய்ச் சுடரே
எஞ்ஞானம் இல்லாதேன் இன்பப் பெருமானே
அஞ்ஞானம் தன்னை அகல்விக்கும் நல்லறிவே

ஆக்கம் அளவிறுதி இல்லாய் அனைத்துலகும்
ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள்தருவாய்
போக்குவாய் என்னைப் புகுவிப்பாய் நின்தொழும்பில்
நாற்றத்தின் நேரியாய் சேயாய் நணியானே
மாற்றம் மனங் கழிய நின்ற மறையோனே

கறந்தபால் கன்னலொடு நெய் கலந்தாற் போலச்
சிறந்தடியார் சிந்தனையுள் தேன் ஊறி நின்று
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்கள் ஓர் ஐந்து உடையாய் விண்ணோர்கள் ஏத்த
மறைந்திருந்தாய் எம்பெருமான் வல்வினையேன் தன்னை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறைந்திட மூடிய மாய இருளை
அறம் பாவம் என்னும் அருங் கயிற்றால் கட்டிப்
புறந்தோல் போர்த்து எங்கும் புழு அழுக்குமூடி
மலம் சோரும் ஒன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலன் ஐந்தும் வஞ்சனையைச் செய்ய

விலங்கு மனத்தால் விமலா உனக்குக்
கலந்த அன்பாகிக் கசிந்துள் உருகும்
நலந்தான் இலாத சிறியேற்கு நல்கி
நிலந்தன்மேல் வந்தருளி நீள்கழல்கள் காட்டி
நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்

தாயிற் சிறந்த தயாவான தத்துவனே
மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே
தேசனே தேனார் அமுதே சிவபுரனே
பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே
நேசஅருள் புரிந்து நெஞ்சில் வஞ்சங் கெடப்

பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே
ஆரா அமுதே அளவிலாப் பெம்மானே
ஓராதார் உள்ளத்து ஒளிக்கும் ஒளியானே
நீராய் உருக்கி என் ஆருயிராய் நின்றானே
இன்பமும் துன்பமும் இல்லானே உள்ளானே

அன்பருக்கன்பனே யாவையுமாய் அல்லையுமாம்
சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே அந்தம் நடுவாகி அல்லானே
ஈர்த்தென்னை யாட்கொண்ட எந்தை பெருமானே
கூர்த்த மெய்ஞ்ஞானத்தால் கொண்டுணர்வார் தம்கருத்தின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண் உணர்வே
போக்கும் வரவும் புணர்வும் இலாப் புண்ணியனே
காக்கும் எம் காவலனே காண்பரிய பேர் ஒளியே
ஆற்றின்ப வெள்ளமே அத்தா மிக்காய் நின்ற
தோற்றச் சுடர் ஒளியாய்ச் சொல்லாத நுண் உணர்வாய்

மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்த றிவாம்
தேற்றனே தேற்றத் தெளிவே என் சிந்தனையுள்
ஊற்றான உண்ணார் அமுதே உடையானே
வேற்று விகார விடக்குடம்பின் உட்கிடப்ப
ஆற்றே னெம் ஐயா அரனே ஓ என்றென்று

போற்றிப் புகழ்ந்திருந்து பொய் கெட்டு மெய்யானார்
மீட்டிங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக் குரம்பைக் கட்டழிக்க வல்லானே
நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதனே
தில்லையுட் கூத்தனே தென்பாண்டி நாட்டானே

அல்லற் பிறவி அறுப்பானே ஓவென்று
சொல்லற்கு அரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்ச்
சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தின் உள்ளார் சிவனடிக்கீழ்ப்
பல்லோரும் ஏத்தப் பணிந்து

*திருச்சிற்றம்பலம்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

*முருகன் துணை*

# கந்தர் சஷ்டி கவசம்

*திருச்சிற்றம்பலம்*

## காப்பு

### நேரிசை வெண்பா

துதிப்போர்க்கு வல்வினைபோம் துன்பம்போம்நெஞ்சிற்
பதிப்போர்க்குச் செல்வம் பலித்து - கதித்தோங்கும்
நிஷ்டையுங் கைகூடும் நிமல ரருள்கந்தர்
சஷ்டிக் கவசந்தனை.

## குறள் வெண்பா

அமரரிடர் தீர வமரம் புரிந்த
குமரனடி நெஞ்சே குறி.

சஷ்டியை நோக்கச் சரவண பவனார்
சிஷ்டருக் குதவுஞ் செங்கதிர் வேலோன்
பாதமிரண்டில் பன்மணிச் சதங்கை
கீதம் பாடக் கிண்கிணியாட
மைய நடனஞ்செயும் மயில்வா கனனார்
கையில் வேலாலெனைக்காக்கவென்று வந்து
வரவர வேலா யுதனார் வருக
வருக வருக மயிலோன் வருக
இந்திரன் முதலா வெண்டிசை போற்ற
மந்திர வடிவேல் வருக வருக
வாசவன் மருகா வருக வருக
நேசக் குறமகள் நினைவோன் வருக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆறுமுகம் படைத்த ஐயா வருக
நீறிடும் வேலவன் நித்தம் வருக
சிரகிரி வேலவன் சீக்கிரம் வருக
சரவணபவனார் சடுதியில் வருக
ரஹணபவச ரரரர ரரர
ரிஹணபவச ரிரிரிரி ரிரிரி
விணபவ சரஹண வீரா நமோ நம
நிபவ சரவண நிறநிற நிறனெ
வசர வணப வருக வருக
அசுரர் குடிகெடுத்த ஐயா வருக
என்னை யாளு மிளையோன் கையில்
பன்னிரண்டாயுதம் பாசாங்குசமும்
பரந்த விழிகள் பன்னிரண் டிலங்க
விரைந்தெனைக் காக்க வேலோன் வருக
ஐயுங் கிலியும் அடைவுடன் சௌவும்
உய்யொளி சௌவும் உயிரையுங் கிலியும்
கிலியுஞ் சௌவும் கிளரொளி யையும்
நிலைபெற் றென்முன்நித்தமு மொளிரும்
சண்முகன் நீயும் தனியொளி யொவ்வும்
குண்டலி யாஞ்சிவ குகன்றினம் வருக
ஆறுமுகமும் அணிமுடி யாறும்
நீறிடு நெற்றியும் நீண்ட புருவமும்
பன்னிரு கண்ணும் பவளச்செவ் வாயும்
நன்னெறி நெற்றியில் நவமணிச் சுட்டியும்
ஈராறு செவியில் இலகுகுண் டலமும்
ஆறிரு திண்புயத் தழகிய மார்பில்
பல்பூஷணமும் பதக்கமுந் தரித்து
நன்மணிபூண்ட நவரத்தின மாலையும்
முப்புரி நூலும் முத்தணி மார்பும்
செப்பழ குடைய திருவயிறுந்தியும்
துவண்ட மருங்கில் சுடரொளிப் பட்டும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நவரத்தினம் பதித்த நற்சீ ராவும்
இருதொடையழகும் இணைமுழந்தாளும்
திருவடி யதனில் சிலம்பொலி முழங்க
செககண செககண செககண செகண
மொகமொக மொகமொக மொகமொகமொகன
நகநக நகநக நகநக நகென
டிகுகுண டிகுகுண டிகுகுண டிகுண
ரரரர ரரரர ரரரர ரரர
ரிரிரிரி ரிரிரிரி ரிரிரிரி ரிரிரி
டுடுடு டுடுடு டுடுடு டுடு
டகுடகு டிகுடிகு டங்கு டிங்குகு
விந்து விந்து மயிலோன் விந்து
முந்து முந்து முருகவேள் முந்து
என்தனை யாளும் ஏரகச் செல்வ
மைந்தன் வேண்டும் வரமகிழ்ந் துதவும்
லாலா லாலா லாலா வேசமும்
லீலா லீலா லீலா விநோதனென்
றுன்றிரு வடியை உறுதியென் றெண்ணும்
என்றலை வைத்துன் இணையடி காக்க
என்னுயிர்க் குயிராம் இறைவன் காக்க
பன்னிரு விழியால் பாலனைக் காக்க
அடியேன் வதனம் அழகுவேல் காக்க
பொடிபுனை நெற்றியைப் புனிதவேல் காக்க
கதிர்வே லிரண்டும் கண்ணினைக் காக்க
விதிசெவி யிரண்டும் வேலவர் காக்க
நாசிக ளிரண்டும் நல்வேல் காக்க
பேசிய வாய்தனைப் பெருவேல் காக்க
முப்பத் திருபல்முனைவேல் காக்க
செப்பிய நாவைச் செவ்வேல் காக்க
கன்ன மிரண்டும் கதிர்வேல் காக்க
என்னிளங் கழுத்தை இனியவேல் காக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மார்பை இரத்தின வடிவேல் காக்க
சேரிள முலைமார் திருவேல் காக்க
வடிவே லிருதோள் வளம்பெறக் காக்க
பிடரிக ளிரண்டும் பெருவேல் காக்க
அழகுடன் முதுகை அருள்வேல் காக்க
பழுபதினாறும் பருவேல் காக்க
வெற்றிவேல் வயிற்றை விளங்கவே காக்க
சிற்றிடை யழகுறச்செவ்வேல் காக்க
நாணாங் கயிற்றை நல்வேல் காக்க
ஆண்குறி யிரண்டும் அயில்வேல் காக்க
பிட்ட மிரண்டும் பெருவேல் காக்க
வட்டக் குதத்தை வல்வேல் காக்க
பணைத்தொடை யிரண்டும் பருவேல் காக்க
கணைக்கால் முழந்தாள் கதிர்வேல் காக்க
ஐவிர லடியினை அருள்வேல் காக்க
கைக ளிரண்டும் கருணைவேல் காக்க
முன்கை யிரண்டும் முரண்வேல் காக்க
பின்கை யிரண்டும் பின்னவளிருக்க
நாவிற் சரஸ்வதி நற்றுணையாக
நாபிக் கமலம் நல்வேல் காக்க
முப்பா னாடியை முனைவேல் காக்க
எப்பொழு தும்மெனை எதிர்வேல் காக்க
அடியேன் வதனம் அசைவுள நேரம்
கடுகவே வந்து கனகவேல் காக்க
வரும்பக றன்னில் வச்சிரவேல் காக்க
அரையிரு டன்னில் அனையவேல் காக்க
ஏமத்திற் சாமத்தில் எதிர்வேல் காக்க
தாமத நீக்கிச் சதுர்வேல் காக்க
காக்க காக்க கனகவேல் காக்க
நோக்க நோக்க நொடியில் நோக்க
தாக்க தாக்க தடையறத் தாக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்க்க பார்க்க பாவம் பொடிபட
பில்லி சூனியம் பெரும்பகை யகல
வல்ல பூதம் வலாஷ்டிகப் பேய்கள்
அல்லற்படுத்தும் அடங்கா முனியும்
பிள்ளைகள் தின்னும் புழைக்கடை முனியும்
கொள்ளிவாய்ப் பேய்களும் குறளைப் பேய்களும்
பெண்களைத் தொடரும் பிரமராக் கதரும்
அடியனைக் கண்டால் அலறிக் கலங்கிட
இரிசிகாட் டேரி இத்துன்ப சேனையும்
எல்லிலு மிருட்டிலும் எதிர்ப்படு மண்ணரும்
கனபூசை கொள்ளும் காளியோ டனைவரும்
விட்டாங்காரரும் மிகுபல பேய்களும்
தண்டியக் காரரும் சண்டாளர்களும்
என்பெயர் சொல்லவும் இடிவிழுந் தோடிட
ஆனை யடியினில் அரும்பா வைகளும்
பூனை மயிரும் பிள்ளைக ளென்பும்
நகமும் மயிரும் நீண்முடி மண்டையும்
பாவைகளுடனே பலகல சத்துடன்
மனையிற் புதைத்த வஞ்சனை தனையும்
ஒட்டிய பாவையும் ஒட்டிய செருக்கும்
காசும் பணமும் காவுடன் சோறும்
ஓதுமஞ் சனமும் ஒருவழிப் போக்கும்
அடியனைக் கண்டால் அலைந்து குலைந்திட
மாற்றார் வஞ்சகர் வந்து வணங்கிட
காலதூதாளெனைக் கண்டாற் கலங்கிட
அஞ்சி நடுங்கிட அரண்டு புரண்டிட
வாய்விட்டலறி மதிகெட் டோட
படியினில் முட்டப் பாசக் கயிற்றால்
கட்டுட னங்கம் கதறிடக் கட்டு
கட்டி உருட்டு கால்கை முறிய
கட்டு கட்டு கதறிடக் கட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முட்டு முட்டு விழிகள் பிதுங்கிட
செக்கு செக்கு செதிற் செதிலாக
சொக்கு சொக்கு சூர்ப்பகை சொக்கு
குத்து குத்து கூர்வடி வேலால்
பற்று பற்று பகலவன் தணலெரி
தணலெரி தணலெரி தணலதுவாக
விடு விடு வேலை வெருண்ட துவோடப்
புலியும் நரியும் புன்னரி நாயும்
எலியும் கரடியும் இனித்தொடர்ந்தோடத்
தேளும் பாம்பும் செய்யான் பூரான்
கடுவிட விஷங்கள் கடித்துய ரங்கம்
ஏறிய விஷங்கள் எளிதினிலிறங்க
ஒளிப்புஞ் சுளுக்கும் ஒருதலை நோயும்
வாதஞ் சயித்தியம் வலிப்புப் பித்தம்
சூலைஷயங் குன்மம் சொக்குச் சிரங்கு
குடைச்சல் சிலந்தி குடல்விப் பிரிதி
பக்கப் பிளவை படர்தொடை வாழை
கடுவன்படுவன் கைத்தாள் சிலந்தி
பற்குத் தரணை பருவரை யாப்பும்
எல்லாப் பிணியும் என்றனைக் கண்டால்
நில்லாதோட நீயெனக் கருள்வாய்
ஈரே ழுலகமும் எனக்குறவாக
ஆணும் பெண்ணும் அனைவரு மெனக்கா
மண்ணா ளரசரும் மகிழ்ந்து றவாகவும்
உன்னைத் துதிக்க உன்திரு நாமம்
சரவண பவனே சைலொளி பவனே
திரிபுர பவனே திகழொளி பவனே
பரிபுர பவனே பவமொளி பவனே
அரிதிரு மருகா அமரா பதியைக்
காத்துத் தேவர்கள் கடுஞ்சிறை விடுத்தாய்
கந்தா குகனே கதிர் வேலவனே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கார்த்திகை மைந்தா கடம்பா கடம்பனை
இடும்பனை அழித்த இனியவேல் முருகா
தணிகா சலனே சங்கரன் புதல்வா
கதிர்காமத்துறை கதிர்வேல் முருகா
பழநிப் பதிவாழ் பாலகுமாரா
ஆவினன் குடிவாழ் அழகிய வேலா
செந்தின் மாமலையுறும் செங்கல்வ ராயா
சமரா புரிவாழ் சண்முகத் தரசே
காரார் குழலாள் கலைமகள் நன்றாய்
என்னா விருக்க யானுனைப் பாட
எனைத் தொடர்ந்திருக்கும் எந்தை முருகனைப்
பாடினேன் ஆடினேன் பரவசமாக
ஆடினேன் னாடினேன் ஆவினன் பூதியை
நேச முடன்யான் நெற்றியி லணியப்
பாச வினைகள் பற்றது நீங்கி
உன்பதம் பெறவே உன்னருளாக
அன்புட னிரக்ஷி அன்னமும் சொன்னமும்
மெத்த மெத்தாக வேலாயுதனார்
சித்திபெற்றடியேன் சிறப்புடன் வாழ்க
வாழ்க வாழ்க மயிலோன் வாழ்க
வாழ்க வாழ்க வடிவேல் வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குரு வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குற மகளுடன்
வாழ்க வாழ்க வாரணத் துவசம்
வாழ்க வாழ்கவென் வறுமைகள் னீங்க
எத்தனை குறைகள் எத்தனை பிழைகள்
எத்தனை யடியேன் எத்தனை செயினும்
பெற்றவள் னீகுரு பொறுப்ப துன்கடன்
பெற்றவள் குறமகள் பெற்றவளாமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளையென் றன்பாய்ப் பிரிய மளித்து
மைந்தனென் மீதுன் மனமகிழ்ந் தருளித்
தஞ்சமென்றடியார் தழைத்திட வருள்செய்
கந்தர் சஷ்டி கவசம் விரும்பிய
பாலன் தேவ ராயன் பகர்ந்ததை
காலையில் மாலையில் கருத்துட னாளும்
ஆசாரத்துடன் அங்கந் துலக்கி
நேச முடனொரு நினைவது வாகிக்
கந்தர் சஷ்டி கவச மிதனைச்
சிந்தை கலங்காது தியானிப்பவர்கள்
ஒருநாள் முப்பத் தாறுருக் கொண்டு
ஓதியே செபித்து உகந்துநீ றணிய
அஷ்டதிக் குள்ளோர் அடங்கலும் வசமாய்த்
திசைமன்ன ரெண்மர் செயலதருளுவர்
மாற்றல ரெல்லாம் வந்து வணங்குவர்
நவகோள் மகிழ்ந்து நன்மை யளித்திடும்
நவமத னெனவும் நல்லெழில் பெறுவர்
எந்த நாளுமீ ரெட்டாய் வாழ்வர்
கந்தர் கைவேலாங் கவசத் தடியை
வழியாய்க் காண மெய்யாய் விளங்கும்
விழியாற் காண வெருண்டிடும் பேய்கள்
பொல்லா தவரைப் பொடி பொடி யாக்கும்
நல்லோர் நினைவில் நடனம் புரியும்
சர்வ சத்துரு சங்கா ரத்தடி
அறிந்தென துள்ளம் அஷ்டலட் சுமிகளில்
வீரலட்சுமிக்கு விருந்துண வாகச்
சூரபத்மாவைத் துணித்தகை யதனால்
இருபத் தேழ்வர்க் குவந்தமு தளித்த
குருபரன் பழநிக் குன்றினி லிருக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சின்னக் குழந்தை சேவடி போற்றி
எனைத்தடுத் தாட்கொள என்றன துள்ளம்
மேவிய வடிவுறும் வேலவ போற்றி
தேவர்கள் சேனா பதியே போற்றி
குறமகள் மனமகிழ் கோவே போற்றி
திறமிகு திவ்விய தேகா போற்றி
இடும்பா யுதனே இடும்பா போற்றி
கடம்பா போற்றி கந்தா போற்றி
வெட்சிப் புனையும் வேளே போற்றி
உயர்கிரி கனக சபைக்கோ ரரசே
மயினட மிடுவோய் மலரடி சரணம்
சரணஞ் சரணஞ் சரவண பவ ஓம்
சரணஞ் சரணஞ் சண்முகா சரணம்

## காப்பு

சண்முகக் கடவுள் போற்றி
சரவணத்துதித்தாய் போற்றி
கண்மணி முருகா போற்றி
கார்த்திகை பாலா போற்றி
தண்மலர் கடப்பமாலை
தாங்கிய தோளா போற்றி
விண்மதி வதனவள்ளி
வேலவா போற்றி போற்றி

*திருச்சிற்றம்பலம்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாயி பஜன்கள்

*திருச்சிற்றம்பலம்*

விநாயகா விநாயகா
விஸ்வா தாரா விநாயகா
சித்தி விநாயகா பவ பய நாசா
சுரமுனி வந்தித ஸ்ரீ கணேசா

சத் குரு நாதனே வா வா வா
சச்சி தானந்தனே வா வா வா
சர்வ தயாளனே வா வா வா
சத்ய சாயி நாதனே வா வா வா

சந்த்ர சேகராய நம ஓம்
கங்கா தராய நம ஓம்
ஓம் நம சிவாய நம ஓம்
ஹர ஹர ஹராய நம ஓம்
சிவ சிவ சிவாய நம ஓம்
சாயீஸ்வராய நம ஓம் - சத்ய (2)

சத்ய ஸ்வரூபிணி மா - சாயி
ப்ரேம ஸ்வரூபிணி மா - ஜய
ஆனந்த தாயினி ஹ்ருதய விஹாரிணி
பர்த்தி நிவாசினி மா
விக்ன விநாசினி பவ பய ஹாரிணி
காளி கபாலினி மா
த்ரி புவன பாலினி மங்கள தாயினி
மோக்ஷ ப்ரதாயினி மா - [பரமானந்த தாயினி]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவ குமாரனே சக்தி பாலனே வா வா வா
சரவணபவனே ஷண்முக வேலா வா வா வா
ஓம் காரத் தத்துவமே நீ வா வா வா
[புட்டப்] பர்த்தி புரீஸ்வர சாயி நாதா வா வா வா
[சிவகுமாரனே]
கந்தா வாவாவா வேலா வாவாவா சாயி வாவாவா

இராம நாம தாரகம் சதா பஜோரே சதா ஜபோரே
இராம இராம இராம ஜெய் கோதண்ட இராமா
இராம இராம இராம ஜெய் கல்யாண இராமா
இராம இராம இராம ஜெய் பட்டாபி இராமா
இராம இராம இராம ஜெய் பிரசாந்தி இராமா.

முரளி க்ருஷ்ணா முகுந்த க்ருஷ்ணா
மோஹன க்ருஷ்ணா க்ருஷ்ணா க்ருஷ்ணா
கோபி க்ருஷ்ணா கோபால க்ருஷ்ணா
கோவர்த்தன தர க்ருஷ்ணா க்ருஷ்ணா
ராதா க்ருஷ்ணா பால க்ருஷ்ணா
ராச விலோலா க்ருஷ்ணா க்ருஷ்ணா
சீரடி க்ருஷ்ணா பர்த்தி க்ருஷ்ணா
ஸ்ரீ சத்ய சாயி க்ருஷ்ணா க்ருஷ்ணா

சிர்டி சாயி துவாராகா மாயி
ப்ரசாந்தி வாசி சாயி ராம்
சாயி ராம் சாயி ராம் ஏக நாம் சுந்தர நாம்
அல்லா ஈஸ்வர சாயி ராம்
பர்த்தி புரிகே ஹே பகவான்
தயாகரோ தயாகரோ தயாகரோ ஹே பகவான்
தயாகரோ க்ருபாகரோ தயாகரோ ஹே பகவான்
சாயி ராம் சாயி ராம் ஏக நாம் சுந்தர நாம்.

ஜெய் சாயி ராம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர்கள் சிவசம்பு சிவபாஸ்கரன், சுமித்திரா சிவபாஸ்கரன் அவர்களின் வாழ்க்கை வரலாறு

அமரர் சிவசம்பு சிவபாஸ்கரன் அவர்கள் 1932ம் ஆண்டு டிசம்பர் மாதம் 28ந் திகதி மலேசியாவிலே உள்ள Ipoh நகரிலே திரு.சிவசம்பு திருமதி.அன்னேஸ்வரி தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரனாகப் பிறந்தார். இளம் வயதிலே மலேசியாவிலே தனது ஆரம்பக் கல்வியைத் தொடங்கிய அமரர் சிவபாஸ்கரன் அவர்கள் அந்த நாட்டு அரசாங்கத்திலே உயர் பதவி வகித்த அவரது தந்தையார் திரு.சிவசம்பு அவர்களின் சுகயீனம் காரணமாகத் தனது தந்தை, தாயார், சகோதரங்களுடன் 1947ம ஆண்டில் இலங்கை வந்து சேர்ந்தார். வரும் வழியில் கப்பலிலேயே அவர் தந்தையார் காலமாகிவிட, அவரின் உடலத்தை மரணப் பெட்டியுடன் ஆழ்கடலில் சங்கமிக்க வைத்த காட்சியைக் கண்டு ஆற்றொணாத் துயரத்தில் ஆழ்ந்து அழுது புலம்பிக் கொண்டிருந்த அவரது அன்னையாரைப் பார்த்து 'அம்மா நீங்கள் அழவேண்டாம் என்னுடைய சகோதரியையும் தம்பிமாரையும் வாழ்வில் கரையேற்றுவது இனி என் பொறுப்பு' என்று ஆறுதல் கூறிய அமரர் சிவபாஸ்கரன் அவர்கள் அன்று முதல் தனது தாயாரையும் சகோதரங்களையும் ஓர் பாசம் மிக்க புதல்வனாகவும் அன்புடன் அரவணைக்கும் அண்ணனாகவும் இருந்து தனது வாழ்க்கைப் பாதையை அமைத்துக் கொண்டார்.

அவர்கள் வந்த கப்பல் கரைசேர்ந்தது. அமரர் சிவபாஸ்கரனுக்கும் தனது அன்பு உறவுகளைக் கரை சேர்க்கும் பணி ஆரம்பமாயிற்று. காங்கேசன்துறை மாங்கொல்லை கிராமத்தில் வாழ்க்கையைத் தொடங்கிய அவர் தெல்லிப்பழை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகாஜனா கல்லூரியில் சேர்ந்து தனது கல்வியைத் தொடர்ந்தார். சகல பாடங்களிலும் திறமைச் சித்தியுடன் சித்தியடைவதோடு மட்டும் நின்றுவிடாது. உதைப் பந்தாட்ட வீரராய் மகாஜனா கல்லூரி அணியிலே Centre Half நிலையில் விளையாடி கீர்த்தியைப்பெற்றார். சாரணர் இயக்கத்தின் தலைவனாகவும் கல்லூரியின் மாணவத் தலைவனாகவும் சிறப்பாகப் பணியாற்றி, பின்பு லண்டன் B.Sc பட்டதாரியாகி தான் கல்வி கற்ற கல்லூரியிலேயே பௌதீகம், கணிதம், ஆகிய துறைகளில் ஆசிரியராக நியமனம் பெற்று, அத்தோடு Cricket Coach ஆகவும் பணியாற்றி, கல்லூரியின் உயர்வுக்காகப் பாடுபட்டார். பின்பு லண்டன் சென்று பொறியியல் பட்டதாரியாகி அங்கு British Telecom என்ற நிறுவனத்திலேயே இரண்டு வருடங்கள் பொறியியலாளராகக் கடமையாற்றிப் பின்பு இலங்கை திரும்பினார்.

இலங்கை திரும்பியவுடன் 1966ம் ஆண்டு தொழில் திணைக்களத்திலே தொழிற்சாலைகள் (Factories) பொறியியலாளராக நியமனம் பெற்ற அவர் அங்கு சிறப்புறச் சேவையாற்றி 1973-1974 ஆண்டுகளில் மேற்படிப்புக்காக மீண்டும் லண்டன் சென்று நாடு திரும்பினார். சில வருடங்கள் Telecommunication Department ல் பொறியியலாளராக கடமையாற்றி பின்பு தொழில் திணைக்களத்தில் தொழிற்சாலைகள் பிரிவில் உயர்பதவிக்கு நியமிக்கப்பட்டார். 1977ம் ஆண்டு பிரதேச தலைமைப் பொறியியலாளராகப் பதவி உயர்வு பெற்று அநுராதபுரம் தொட்டு யாழ்ப்பாணம் வரையான பிரதேசத்திற்குப் பொறுப்பான பொறியியலாளராகத் திறம்பட செயற்பட்டார். அன்று அநுராதபுரத்திலே இருந்து இயங்கி வந்த பிரதேச காரியாலயத்தை 1977ம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் ஏற்பட்ட இனக்கலவரங்கள் காரணமாக யாழ்ப்பாணத்திற்கு மாற்றியமைப்பதில் அமரர் சிவபாஸ்கரன் பெரும் பங்கு வகித்தார். பின்பு 1979ம் ஆண்டளவில் தொழில்த் திணைக்களத்தின் தலைமைப் பொறியியலாளராக (Chief



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Engineer of Factories) பதவி உயர்வு பெற்று, சிறப்புறச் செயலாற்றி பின்பு சுகாதாரம், பாதுகாப்பு என்பவற்றிற்குப் பொறுப்பான பிரதி தொழில் ஆணையாளராக (Deputy Commissioner of Labour (Health & Safety) பதவி உயர்வு பெற்றார். அவர் இப்பணியை வகித்த காலத்தில் சுகாதாரம், பாதுகாப்பு சம்பந்தமாக இலங்கையின் பல பாகங்களிலும் உள்ள தொழிற்சாலைகளுக்கு நேரில் விஜயம் செய்து Industrial Safety சம்பந்தமான ஆலோசனைகளை அயராது வழங்கி யாவருடைய நன் மதிப்பிற்கும் பாத்திரமானவராக விளங்கினார். அவரின் தொழில் சார் சிறப்பு தகைமைகள் காரணமாக உலக தொழில் ஸ்தாபனம் (International Labour Organization) அவரை அடிக்கடி ஜெனீவாவிற்கும் மற்றும் பாங்கொக், ஜெர்மனி, இத்தாலி, அமெரிக்கா, கனடா, Finland என்று உலகின் பல பாகங்களிற்கும் வரவழைத்து அங்கெல்லாம் நடைபெற்ற Industrial Safety சார்ந்த மகாநாடுகளிலே அவரை பங்குபற்றி உரையாற்றச் செய்தது. அத்தோடு இலங்கை அரசாங்கம் தொழிலாளர்கள் நஷ்டஈடு சட்டத்தை (Workmen's Compensation Ordinance) சீர்திருத்தி ஓர் புதிய சட்டத்தைக் கொண்டு வருவதற்கான ஆலோசனைக் குழுவின் தலைவராகவும அவரை நியமித்தது. அத்தோடு விபத்துக்களில் இருந்து மக்களைப் பாதுகாப்பதற்காக அமைக்கப்பட்ட ஒரு முக்கிய ஸ்தாபனத்தின் தலைவராகவும் அவர் பலகாலம் பணிபுரிந்து வந்தார்.

1992ம் ஆண்டு அவர் தனது அரசாங்க உத்தியோகத்தில் இருந்து இளைப்பாறிய பின்பு, பல தனியார் நிறுவனங்கள தமது தொழிற்சாலை இயந்திரங்கள் பாதுகாப்பாக இயங்குவதற்கான வழிமுறைக்காக அவரை ஆலோசகராக (Consultant) நியமித்தன. அத்தோடு சில வருடங்களாக உலக தொழில் ஸ்தாபனம் அவரை ஒரு ஆலோசகராக (I.L.O Consultant) நியமித்தது. அத்தோடு அரசாங்க ஒப்பந்தங்கள் (Government Contracts) சம்பந்தமான பல Tender Boards களில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர் ஒரு தொழில்சார் உறுப்பினராக சிறப்புற கடமையாற்றியதுடன் தொலைத் தொடர்பு திணைக்களத்தில் பொறியியலாளர்களைத் தேர்ந்தெடுப்பதற்கான சபையிலும் (Interview Board) பதவி வகித்தார்.

இந்தப் பணிகளோடு அவர் தான் கற்ற மகாஜனா கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தின் தலைவராகவும், பின்பு அச்சங்கத்தின் காப்பாளராகவும் அக்கல்லூரியின் பணிகளிலே தன்னை முழுமையாக அர்ப்பணித்துச் செயற்பட்டார். இத்தோடு நின்று விடாமல் Ceylinco நிறுவனம் நடத்தி வந்த கைத்தொழில் பாதுகாப்பு Industrial Safety சம்பந்தமான கருத்தரங்குகளிலே அவர் எத்தனையோ தடவைகள் உரையாற்றி இருக்கின்றார். இவ்வாறு ஓர் பல்துறை விற்பன்னராக பல முக்கிய பதவிகளை வகித்து அப்பதவிகளுக்குப் புகழ் சேர்த்தவராக வாழ்ந்து வந்த அமரர் சிவபாஸ்கரன் தனது இறுதி நாட்கள் வரை இறைபக்தி நிறைந்த ஓர் சீரிய பக்தராக வாழ்ந்து இறுதிக் காலத்தில் சிறிது நோய் வாய்ப்பட்ட போதும் தன் உடல் நலத்தைக் கருதாமல் சுகயீனம் உற்று இருந்த அருமை துணைவியாரின் நலனிற்கு எவ்வளவோ வழிகளில் பாடுபட்டு வந்தார். தனக்கென வாழாது பிறருக்கு என வாழ்ந்து "Service to Man is Service to God" என்ற சத்யசாயி அருள் மொழிக்கு அமையத் தனது இறுதி மூச்சு வரை வாழ்ந்து வந்த அவர் 2009ம் ஆண்டு மார்ச் மாதம் இருபதாந் திகதி சிவபதம் அடைந்தார்.

அவர் ஆண்டவனின் அருள் ஒளியில் ஐக்கியமான சில தினங்களிலேயே உயிர் நீத்த உத்தமியான அவர் அருமைத் துணைவி சுமித்திரா 1961ம் ஆண்டு அவரைக் கைப்பிடித்த நாள் முதல் கண்மூடும் நாள் வரை ஒரு உண்மையான இந்து மனைவியாக அவரோடு இல்லறம் நடத்தி வந்தார். வத்சலா கோணேஸ்வரபவன், மஞ்சுளா இராஜகுலதேவன் ஆகிய இரு புதல்விகளைப் பெற்றெடுத்த அமரர் சுமித்திரா தனது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளைகளின் நல் வாழ்விற்காவும் அதன் பின்பு அவரின் பேரர்களான சஞ்ஜீவ், வைதீகன், சதீஷ், ஷமித்ரா, அமிதா ஆகியோரின் அன்பு அரவணைப்பிற்காகவும் தனது வாழ்நாளில் பெரும் பகுதியைச் செலவழித்தார். அவருக்குத் தனது பிள்ளைகள் மேல் இருந்த பற்றைப் போலவே நமது மண்ணின் மேல் இருந்த பற்றும் அளப்பரியது என்று செல்லலாம்.

1963 தொடக்கம் 3 வருடங்கள் லண்டனில் கணவரோடும் தனது மூத்தமகள் வத்சலாவோடும் வாழ்ந்து வந்த அவர் தாயகம் திரும்ப வேண்டும் என்ற தணியாத ஆர்வத்தினால் கணவர் சிவபாஸ்கரனை இலங்கை வரத் தூண்டி பின்பு இங்கு வந்த பின்பும் சிலவருடங்கள் தான் பிறந்து வளர்ந்து வந்த சூழலில் உள்ள நல்லூர்க் கந்தன் ஆலயத்தையும் திருநெல்வேலி சிவன் கோவிலையும்விட்டு கொழும்புவர மனம் இல்லாத வராகவே இருந்தார்.

அவர் சுகயீனம் உறும் வரையில் வெள்ளவத்தை பிள்ளையார் கோவில், மயூராபதி அம்மன் போன்ற ஆலயவழிபாடுகளிலும் சாயி பஜனைகளிலும் இடையறாது கலந்துகொண்டு தனது இறுதி மூச்சுவரை தான் சுமங்கலியாகவே இந்த மண்ணகத்தைவிட்டு விண்ணகம் செல்கின்றோம் என்ற உள்உணர்வுடன் இருந்தார் இறுதிக் கட்டத்திலே அவரது மகள்மார், மருமகன்கள், பேரப்பிள்ளைகள் யாவரும் சுற்றி நின்று ஓம் ஸ்ரீராம், ஜெயராம், ஜெய ஜெய ராம் என்ற மந்திரத்தையும் சாயிநாமத்தையும் உச்சரித்தபடியே அவர் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்தனை செய்து கொண்டிருந்த சூழலில் இறை நாமத்தைக் கேட்டபடியே இறையடியை சேரும் இணையற்ற பாக்கியத்தைப் பெற்று 2009ம் ஆண்டு மார்ச் மாதம் 26ந் திகதி சிவபதமடைந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**G.Weerakoon**
*B.A.(Ceylon)*
*Commissioner of Labour (Retired)*
*Adviser (Labour Law/Relations)*
*Telephone:- 2862321*

*20, Gunasekara Gardens,*
*Nawala,*
*Rajagiriya.*
*27/03.2009*

## APPRECIATION

## The Late S.Sivapaskaran

### Former Deputy Commissioner of Labour (Technical) and Chief - Factory Inspecting Engineer

Siva who was the Head of the Factories Division of the Labour Department expired last week, after a brief illness. Siva served the Labour Department for nearly Thirty years and functioned as the Chief engineer, Safety and Health Division, for a period of over 10 years. He was a conscientious public servant who fulfilled his duties with distinction. He was a fine team man.

Siva was honest, upright and an officer of the highest integrity. He bore no ill will or malice towards anyone. He was in the true sense of the term a righteous person. (Dharmista Puggalo)

Even after retirement from state service his professional services were available both to the Employers and trade unions and their members and he imparted the finer points of safety and health at the work place, to all concerned. His forte was his proficiency in all 3 languages. May Siva attain Moksha!

OM Shanti! Shanti!! Shanti!!!

**G.Weerakoon**
*Former Commissioner of Labour*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெல்லிப்பழை மகாஜன கல்லூரியின் அதிபரின் செய்தி

யாழ். தெல்லிப்பழை மகாஜனா கல்லூரியின் புகழை நாடளாவிய வகையில் நிலை நாட்டிய விரல்விட்டு எண்ணக்கூடிய குடும்பங்களில் ஒன்று, மாங்கொல்லை அமரர் சிவசம்புவின் குடும்பம்.

அமரர் சிவபாஸ்கரன் அவர்கள் மகாஜனா அன்னையின் புதல்வன். தன்னுடைய ஆசிரியர்களில் ஒருவராகவும் ஏற்றுக் கொண்டாள். இன்று நம் புதல்வன் அமரராகிவிட்டதனால் கண் கலங்குகிறாள்.

பாடசாலையில் கற்கும்போது உதைப்பந்தாட்டக் குழுவில் அங்கம் வகித்தவர். மாணவ தலைவனாக கடமையாற்றியவர். சாரணர் பிரிவு தலைவராக விளங்கியவர்.

பின்னர் பாடசாலையில் சேவையாற்றும்போது சிறந்த கணித/பௌதீகவியல் ஆசிரியர்.

அத்துடன் துடுப்பெடுத் தாட்டத்தில் பயிற்றுவிப்பாளராகவும் இருந்தவர். பழைய மாணவராகிய அன்னாரின் சேவை அளப்பரியது.

பல வருடங்கள் கொழும்பு மாநகர் சங்கத்தின் தலைவராக இருந்து மறையும் போதும் காப்பாளர்களில் ஒருவராகவும் இருந்தவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்துடன் மகாஜன கல்லூரியின் கல்வி அபிவிருத்தி நிதியத்தின் பணிப்பாளர்களில் ஒருவருமாவர். நூற்றாண்டு விழாவை ஆவலோடு எதிர்நோக்கிக் கொண்டிருந்தவர்.

அவருடைய இழப்பு பாடசாலை சமூகத்திற்குப் பேரிழப்பாகும். அன்னாரின் பாடசாலை விசுவாசம், பாடசாலையை இன்னும் பல நூற்றாண்டுகளுக்கு வாழவைக்கும் என்ற நம்பிக்கையுடன் பாடசாலை கழகத்தின் சார்பில் எமது அஞ்சலியைச் செலுத்துகிறோம்.

அவரது குடும்பத்தவர்களிற்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவர் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

**திருமதி.சிவமலர் அனந்தசயனம்**
*மகாஜன கல்லூரி அதிபர்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லவர், வல்லவர்

மகாஜனாவில் மாணவராய் சாதனைபடைத்தவரும், ஆசிரியராய் மாணவர்களின் இதயத்தில் நீங்காத இடம்பெற்ற வரும், கொழும்புப் பழையமாணவர் சங்கத்தின் ஒப்புவமையற்ற தலைவராகவும், பின்னர் காப்பளராகவும் அமர்ந்து நல்லா லோசனைகள் காலத்துக்குக் காலம் வழங்கி வந்தவருமான திரு.சிவபாஸ்கரன் அவர்கள் அமரராகிவிட்ட செய்தி அறிந்து கனடாப் பழைய மாணவர் சங்கம் பெரிதும் கவல்கின்றது.

1947ஆம் ஆண்டினிலே மலேசியாவில் இருந்து தாயகம் வந்து குடும்பத்தின் மூத்த புதல்வனாக தந்தையாரை இழந்த பின்னர் தாயின் அரவணைப்பிலே மகாஜனாவில் கல்வி கற்பதற்கு வந்து சேர்ந்த திரு.சிவபாஸ்கரன் அவர்கள் படிப்பில் திறமை காட்டியதுடன் நின்று விடாமல் பாடசாலையின் கல்விக்குப் புறமான நிகழ்ச்சிகளிலும் ஈடுபாட்டுடன் பங்கு கொள்ளத் தவறியதில்லை. சிறந்த உதைபந்தாட்ட வீரராக, அணியின் வெற்றிக்காக அல்லும் பகலும் உழைத்த தோடல்லாமல் விளையாட்டிலே கண்ணியமிக்கவராகவும் எதிரணியினரின் சவாலை எதிர் கொள்கின்ற அதே சமயம் அவர்களின் திறமையை மதித்து நட்புடமையுடன் விளையாடியமையால் ஆசிரியர்கள் மாணவர்களுடைய நல்லபிமானத்தையும் பெறத் தவறியதில்லை. அதன் விளைவாக பாடசாலை மாணவர் தலைவராகவும் பதவி வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்.

திரு.சிவபாஸ்கரன் தனது பட்டப் படிப்பினை நிறைவு செய்ததும் அவரை மகாஜனாவிலேயே ஒரு ஆசிரியராக அதிபர் ஜெயரத்தினம் அவர்கள் 1959ஆம் ஆண்டிலே நியமித்தார். என்றும், புன்முறுவல் முகத்தில் தவள பௌதிகவியல் மற்றும் கணிதம் போன்ற கடினமான பாடங்களை மாணவர்களுக்குத் திறமையுடன் போதித்த திரு.சிவபாஸ்கரன் மாணவர்களின் அபிமானத்துக்குரியவராய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிகவும் குறுகிய காலத்திலேயே பெயரீட்டினார். சிவபாஸ்கரன் அவர்களுடைய கடின உழைப்பு, ஏவப்பட்ட வேலையைத் திறம்படச் செய்தல் போன்ற திறன்களை அதிபர் ஜெயரத்தினம் அவர்கள் நிறையவே அறிந்திருந்தமையால் திரு.சிவபாஸ்கரனை கிறிக்கட் குழுவினுக்குப் பொறுப்பாசிரியராக நியமித்தார். மாணவர்களுடன் மிகவும் சினேகபாவத்துடன் பழகும் திரு.சிவபாஸ்கரன் அவர்கள் திறமை மிக்க பல துடுப்பாட்ட வீரர்களையும் உருவாக்கியுள்ளார்.

1962ஆம் ஆண்டிலே இலண்டன் மாநகர் சென்று அங்கே பொறியியலாளராகக் கற்றுத் தேர்ந்து 1967ஆம் ஆண்டு மீண்டும் தாயகம் திரும்பினார். கொழும்புப் பழைய மாணவர் சங்கக் கிளையினைப் புனரமைத்ததுடன் அக்கிளையினது தலைவராக நீண்டகாலம் அளப்பரிய சேவையாற்றியுள்ளார். இளைய தலைமுறையினரின் வளர்ச்சியில் எப்போதுமே அக்கறை காட்டிவந்த சிவபாஸ்கரன் அவர்கள் இளைய தலைமுறையினரிடம் பழைய மாணவர் சங்க நிர்வாகத்தினை ஒப்படைத்து அதன் காப்பாளராக நின்று சங்கத்தின் நற்பணிகள் நலமே நடைபெற உறுதுணையாய் நின்றார்.

2010திலே எமது கல்லூரியின் நூற்றாண்டு விழாவினை நாம் இனிதே நடத்தத் திட்டம் இட்டுக் கொண்டிருக்கின்ற சமயத்திலே பழைய மாணவர் சங்கத்தின் முக்கிய தூண்களில் ஒன்றாக சேவையினை எமது கொழும்புக் கிளை மாத்திரமல்ல, உலக நாடுகள் அனைத்திலும் நிறைந்துள்ள எமது பழைய மாணவர்கள் இழந்து தவிக்கின்றனர். அவரது மறைவினால் பாதிக்கப் பட்டிருக்கும் அவரது மனைவிக்கும் பிள்ளைகளுக்கும், மகாஜன சமூகத்துக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிக்கிறோம்.

**மகாஜனக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் - கனடா**
*104-1920 Ellesmere Road, Ste 203, Toronto, Ontario MIH 3G1*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி மறவா மாணக்கன் ஒருவரின் கண்ணீர் அஞ்சலி

இந்த உலகில் தோன்றி மானிடப்பிறவி எடுத்ததின் பலனை ஏனையோர் பயன் பெறக் கூடியவாறு வழிகாண்பித்த ஒரு சிலரில் அமரர் சிவபாஸ்கரன் ஒருவர் ஆவார்.

பண்டா மாஸ்டர் என பயபக்தியுடன் அழைக்கப்பட்ட அன்னாரின் ஒரு மாணக்கனாருள் ஒருவராக அவரிடம் படித்து அவரிடமிருந்து கற்றுணர்ந்த அவர் தம் நேர்மை, கடமை, சத்தியம் தவறாமை போன்றவை ஆக்கிரமித்து நாம் எமது துறையில் முன்னோடியாக விளங்குவதற்குக் காரணமாக அமைந்தவர் என்றால் மிகையாகாது.

தன் குடும்பத்தில் மூத்தவராகப் பிறந்து, தனியனாகத் தனது உடன் பிறப்புகளை வழிகாட்டி ஒற்றுமையாக உருவாக்கி எமக்கெல்லாம் முன்னுதாரணமாக விளங்கிய அன்னாரின் கடமை உணர்வு மிகவும் போற்றுதற்குரியது.

தனது கடமை ஆற்றும் காலத்தில் அரசாங்கத்திடமிருந்து சம்பளம் மட்டும் பெற்று கிம்பளத்தை உதாசீனப்படுத்திய நானறிந்த தமிழ் ஊழியர்களில் சிலர் ஒருவரில் அன்னாரும் ஒருவராவார்.

மகாஜனாவின் மாணவர்கள் எம்மை ஆவணப்படுத்தத் தயக்கம் காட்டும் இந்த காலகட்டத்தில் அவர்களின் கூட்டுறவு சிறப்புடன் அமைய வேண்டும், இணக்கப் பாட்டுடன் பழகவேண்டும் என விரும்பியிருந்தும், ஒருசில புல்லுருவிகளினால் குழப்பநிலை தோன்றியதையிட்டு மிகவும மனம் நொந்து போயிருந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளியே உள்ள நாம் எல்லாம் பணத்தைச் சேர்த்து அனுப்பி நிகழ்வுக்குத் தலைமை தாங்கத்தான் முடியுமே அன்றி தாய் சங்கம் தான் எதனையும் செய்யமுடியும் என்ற யதார்த்தத்தை உணர்ந்த அன்னார் மகாஜனாவின் நூற்றாண்டுக் கொண்டாட்டத்தின் முக்கியத்துவத்தை முன்கூட்டியே உணர்ந்து 1993 - 1994 ஆண்டளவில் அமரர் ஜெயரத்தினம் நிதியம் ஒன்றினை தெல்லைப்பழை மகாஜனா தாய் சங்கத்தில் உருவாக்குவதற்கு அப்போது அதன் தலைவராக இருந்து எனக்கு அறிவூட்டி அதனை ஆரம்பித்து மெருகூட்டி ஆதரவு நல்கிய பெருமை அவரையே சாரும்.

காலப் போக்கில் அம்முயற்சி சிதைக்கப்பட்டிருந்தாலும் அதன் தொடர்கதையாக மீண்டும் ஒரு நிதியத்தினை வேறு பெயரில் உருவாக்கியமைக்கும் அதன் கருவாக இருந்த அமரர் சிவபாஸ்கரன் அவர்களை நாம் இந்நேரம் நினைவு கூறுவது சாலச் சிறந்ததாகும்.

அவர் தம் முயற்சியின் பலாபலனைப் பெறுவதற்கு அவருக்கு கண்ணீர் அஞ்சலி செலுத்துவோமாக.

தம் குடும்பத் தலைவனை இழந்திருக்கும் அவர் தம் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த கவலையைத் தெரிவிக்கின்றோம்.

அதே வேளையின் ஒரு நன்மகனுக்கு அனைத்திலும் இற்றைகாலம் வரை உறுதுணையாக இருந்து அவர் சிறப்புற வாழ்வதற்கு வழிவகுத்த அவர் குடும்பத்தினருக்கு நன்றியைத் தெரிவிக்கின்றோம்.

**C.உருத்திரலிங்கம்**
*(சிரேஷ்ட பொறியியலாளர்)*
*மகாஜனா பழைய மாணவர் சங்கத்தின்*
*முன்னாள் தலைவர்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெருவாழ்வு வாழ்ந்து மறைந்த நண்பர் அமரர் சிவசம்பு சிவபாஸ்கரன்

எனது நண்பர் சிவசம்பு சிவபாஸ்கரன் அவர்கள், மலேசியா நாட்டில் 1932ம் ஆண்டு மார்கழி மாதம் 28ந் திகதி பிறந்து, தனது தந்தை தாய், சகோதரர்களுடன், 1947ம் ஆண்டில் இலங்கை வந்து சேர்ந்தார். அவர்கள் பிரயாணம் செய்த கப்பலிலேயே அவரது தந்தையார் மரணமடைந்த போது, மரணப்பெட்டியுடன் தந்தையாரை கடலில் இறக்கிவிட்ட துன்பகரமான நிகழ்ச்சியை நேரில் இவர் பார்க்க வேண்டி இருந்தது. மூத்த பிள்ளையாகிய இவரை மட்டும், அதனைப் பார்க்கக் கப்பல் நிர்வாகம் அனுமதியளித்தது.

இலங்கை வந்து சேர்ந்த இவர்கள் காங்கேசந்துறை மாங்கொல்லைக் கிராமத்தில் வசித்து வந்தார்கள். ''நெடுவல் ஆறுமுகம் மாஸ்ரர்'' என்று பலராலும் அன்புடன் அழைக்கப்பட்ட அந்நாள் ஆசிரியர் சுப்பிரமணியம் ஆறுமுகம் அவர்கள் சிவபாஸ்கரன் அவர்களின் மைத்துனர். அவரே நண்பர் சிவபாஸ்கரன் அவர்களை தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரியில் சேர உதவியவர். "First Form B" என்று அழைக்கப்பட்ட ஆறாவது வகுப்பில் இவர் சேர்க்கப்பட்டார். இவ்வகுப்பில் இரண்டாம் வரிசையில் அமர்ந்திருந்த எனக்கு அருகாமையில் இவர் வந்து அமர்ந்து கொண்டார். அன்று முதல் Higher School Certificate (H.S.C) என்று சொல்லப்பட்ட வகுப்பு வரை 1953ம் ஆண்டு வரை ஏழு வருட காலமும் ஒரே வகுப்பில் ஒரே பிரிவிலேயே நாம் இருவரும் கற்று வந்தோம். H.S.C வகுப்பு என்பது தற்போதைய க.பொ.த உயர்தர வகுப்பைப் போன்றது. H.S.C வகுப்பை பல்கலைக்கழக புகுமுக வகுப்பு எனவும் அழைப்பார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நண்பர் சிவபாஸ்கரன் அவர்கள் எமது கல்லூரியில் சேர்ந்த காலத்தில், எமது கல்லூரியில் அறுநூறு மாணவர்கள் மட்டில்தான் படித்திருப்பார்கள். H.S.C வகுப்பு 1947ம் ஆண்டில் எமது கல்லூரியில் இல்லை. 1950ம் ஆண்டில் தான் ஆரம்பிக் கப்பட்டது. இவர் தனது வகுப்பில் உள்ள மாணவர்களோடு மட்டும் அல்லாமல் சகல மாணவர்களுடனும் நன்கு பழக ஆரம்பித்துவிட்டார். எந்த ஒரு மாணவன் இடத்தும் காணப்படும் நல் இயல்பு ஒன்றைக் கண்டு அதையே பெரிசாக பேசி மகிழ்வார். இதன் காரணமாக இவர் மாணவர் மத்தியில் ஒரு நல்ல நண்பனாக மதிக்கப்பட்டார். தமிழ், சமயம் தவிர்ந்த ஏனைய பாடங்கள் எல்லாம் ஆங்கில மொழி மூலமே அன்று கற்பிக்கப்பட்டு வந்தது. இவர் மலேசியாவிலிருந்து வந்த காரணத்தால் ஆங்கிலத்தில் கற்பது கடினமாக இருக்க வில்லை. எனவே சகல பாடங்களையும் திறமையாகச் செய்து சகல வகுப்புகளிலும் திறமை மிக்க மாணவர்களில் ஒருவராகத் திகழ்ந்தார். அன்றியும் விளையாட்டுத் துறையிலும் மிகவும் ஆர்வம் உள்ளவராக இருந்தார்.

J.S.S.A என்று அழைக்கப்பட்ட யாழ்ப்பாண பாடசாலைகளின் விளையாட்டுக் கழகத்தால் நடத்தப்பட்டு வந்த உதைப்பந்தாட்ட போட்டிகளில் முதன் முறையாக எமது கல்லூரி 1949ம் ஆண்டு கலந்து கொண்டது. அமரர் A.கனகசபை என்பவரின் தலைமையில் அமைந்த எமது கல்லூரி உதை பந்தாட்டக் கோஷ்டியில், எமது சிவபாஸ்கரன் அவர்கள் Centre Half என்ற நிலையில் விளையாடி, ஒரு சிறந்த வீரராகத் திகழ்ந்தார். முதல் வருடத்திலேயே எமது கல்லூரி ஐந்து போட்டிகளில், மூன்று போட்டிகளில் வெற்றிபெற்று பெயர் பெற்றதும் பின்னர் எட்டு ஆண்டுகள் அடுத்தடுத்து மாவட்ட வெற்றிக் கிண்ணத்தைப் பெற்றதும் சரித்திரம். நண்பர் சிவபாஸ்கரன் அவர்கள் ஆரம்பகால உதைப்பந்தாட்ட வீரராக இருந்தது கல்லூரி மாணவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மத்தியில் மேலும் அவருக்குச் சிறப்பை அளித்தது. கல்வி, விளையாட்டுத்துறை என்பவற்றோடு சிறந்த குணஇயல்பு களையும் கொண்ட நண்பர் சிவபாஸ்கரன் அவர்கள் கல்லூரி நிருவாகத்தால் மாணவத்தலைவராக நியமிக்கப்பட, அத்துறையிலும் தனது சிறந்த பங்களிப்பைச் செய்து எல்லோரினது பாராட்டுக் களையும் பெறவைத்தது. சாரணர் இயக்கத்திலும் சேர்ந்து, சாரண இயக்கத் தலைவர்களில் ஒருவராகச் சேவையாற்றியமையும் இங்கு குறிப்பிடப்பட வேண்டிய தொன்றாகும்.

கல்லூரிப் படிப்பை முடித்துக் கொண்ட நண்பர் B.Sc பட்டதாரியாகி மீண்டும் மகாஜனாக் கல்லூரியில் ஆசிரியராகக் கடமை ஏற்றார். நானும் இலங்கைப் பல்கலைக் கழகத்தில் கற்றுவிட்டு மகாஜனாவில் நண்பர் சிவபாஸ்கரனுடன் ஆசிரியராகக் கடமை செய்தேன். மாணவர்களாக ஒரே காலத்தில் ஒரே வகுப்பில் படித்த நாங்கள், பின்பு ஆசிரியர்களாகவும் ஒரே காலத்தில் மகாஜனாவில் கல்வி கற்பிக்கும் வாய்ப்பையும் பெற்றோம்.

பொறியியலாளராக வேண்டும் என்ற இலட்சியத்தைக் கொண்ட எனது நண்பர் பொறியியல் படிப்பை மேற்கொள்ள இலண்டன் சென்று பொறியியல் பட்டத்தைப் பெற்றுக் கொண்டு இலங்கை திரும்பினார்.

இலங்கைத் தொழிற் திணைக்களத்தில் தொழிற்சாலைப் பொறியியலாளராக நியமனம்பெற்று, இத்துறையிலும் மிகச் சிறப்பாகக் கடமையாற்றினார். கணிசமான தொழிற்சாலைகளில் சட்டத்திற் கமைவாகத் தொழிலாளிகளுக்கு வேண்டிய பாதுகாப்புக்கள் செய்து கொடுக்கப்படுவதில்லை. இவ்வசதிகள் பொறிமுறைப் பாதுகாப்புக்கள் அனைத்தையும் செய்து கொடுக்க நண்பர் பெரும்பங்காற்றினார். பின்னர் தொழில் அமைச்சில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரதி ஆணையாளராகப் பதவி உயர்வு பெற்று 1992ம் ஆண்டு வரை கடமை புரிந்து இளைப்பாறினார். இளைப்பாறிய பின்பும் பல பொறுப்புக்களை ஏற்றுக் கடமை புரிந்தார். இவரின் சேவை கல்விச் சேவையாக மட்டும் இல்லாமல் நாட்டின் நிருவாகத் துறைக்கும் விரிவடைந்து முழு நாடும் பயன்பெறும் வண்ணம் அமைந்தது.

எமது கல்லூரியின் முன்னை நாள் அதிபரும் சிற்பியுமாகிய அமரர் தெ.து.ஜெயரத்தினம் அவர்கள் பற்றியும், நண்பரின் மைத்துனராகிய ஆறுமுகம் மாஸ்ரர் பற்றியும் அவர் மிகவும் நன்றியறிதலுடன் இருந்தமையை நான் பல தடவைகளில் அறியக் கூடியதாக இருந்தது. நண்பரின் நன்றியுள்ளத்தை நினைந்து நான் வியப்படைவதுண்டு.

எமது கல்லூரியின் பழைய மாணவர் சங்கக் கொழும்புகிளை 1953ம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டு 1983ம் ஆண்டின் கலவரத்துடன் செயலிழந்துவிட்டது. எனினும் இது நண்பர் சிவபாஸ்கரன், பழைய மாணவன் M.பாலசிங்கம் போன்றவர்களால் 1994ம் ஆண்டில் புனரமைக்கப்பட்ட போது நண்பர் சிவபாஸ்கரன் அவர்கள் இதன் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டு 2002ம் ஆண்டு வரையும் மீண்டும் மீண்டும் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டார். 2002ம் ஆண்டு முதல் அவரது இறுதிக்காலம் வரை அதன் தலைமைத்துவத்தை இளம் சந்ததியினருக்கு விட்டுவிட்டு சங்கத்தின் காப்பாளர்களில் ஒருவராகக் கடமை செய்தார்.

கல்லூரியில் இன்றைய மாணவர்களுக்கும் வருங்கால மாணவர்களுக்கும் வேண்டிய வசதிகளைச் செய்து கொடுப்பதற்கெனக் கொழும்பு பழைய மாணவர் சங்கத்தினால் ஆரம்பிக்கப்பட்ட கல்லூரி அபிவிருத்தி நிதியத்தின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பணிப்பாளர்களில் ஒருவராக நிதியத்தின் தொடக்க காலத்திலிருந்து, அவரின் இறுதிக்காலம் வரை கடமையாற்றினார்.

கல்லூரியின் வளர்ச்சியே, அவரின் இறுதிமூச்சுவரை இருந்தது என்றால் அது மிகையாகாது. மகாஜனாச் சமூகம் என்றும் அவருக்குக் கடமைப்பட்டது. அவரை என்றும் நினைவில் வைத்துக் கொள்ளும்.

நண்பர் இறைவனடி சேர்ந்து ஒரு கிழமைக்குள், அவர் நல்ல சேவைகளையெல்லாம் செய்ய உதவியாக இருந்த அவரின் பாரியாரும் இறைவன் அடி சேர்ந்துவிட்டார்.

அவருடைய சகோதரர்கள், பிள்ளைகள், பேரப்பிள்ளைகள் மற்றும் உறவினர்கள் அனைவரும் அவரது பெருமை நிறைந்த வாழ்வையும் சேவைகளையும் எண்ணிப் பெருமையடையலாம். நண்பரின் ஆத்மா சாந்தியடைவதாக!.

**த.பூ.முருகையா**
*முன்னைநாள் ஆசிரியர்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

*சிவமயம்*

"என்கடன் பணி செய்து கிடப்பதே"

"இறைபணிச் செம்மல்"
**ச.விநாயகரத்தினம்**
ஓய்வுபெற்ற ஆசிரிய ஆலோசகர்,
கல்வித்திணைக்களம், யாழ்ப்பாணம்.
செயலர், சிவநெறிக் கழகம்,
கீரிமலை, காங்கேசன்துறை.
நிர்வாகசபை உறுப்பினர்,
ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம், தெல்லிப்பழை

"புதுவீடு"
பன்னாலை,
தெல்லிப்பழை.

# மாந்தர் தம் உள்ளத் தனையது உயர்வு

அண்மையில் அமரராகிய எனது நண்பர் திரு.சி.சிவபாஸ்கரன அவர்கள் மலேசியாவில் பிறந்தாலும் காங்கேசன்துறை மாங்கொல்லையில் வாழ்ந்த காலத்தில் மகாஜனக் கல்லூரியில் கல்வி பயின்றார். அக்காலத்தில் யானும் அதே கல்லூரியில் கல்வி பயின்றேன்.

பழகுவதற்கு இனிய பண்பாளராக விளங்கினார். அதனால் எனது உள்ளத்தை மிகவும் கவர்ந்தார். உயர்ந்த உள்ளமும் பரந்த நோக்கும் கொண்டவர் அவர்.

"வெள்ளத் தனைய மலர்நீட்டம் மாந்தர்தம்
உள்ளத் தனையது உயர்வு" - *பொதுமறை*

என்று ஒரே மாதிரியான நோக்குடனும் போக்குடனும் விளங்கியமையால் எல்லோரையும் பெரிதும் கவன்றார். ஆசிரியர், மாணவர் அனைவரிலும் செல்வாக்குப் பெற்று விளங்கினார். கல்வியிலும் விளையாட்டுத்துறையிலும் சிறந்து விளங்கினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமது உள்ளத்தின் உயர்வினால் உயர் பதவிகளில் அமர்ந்து சிறந்து விளங்கினார். அதனால் கல்லூரிக்குப் பெருமையைத் தேடித்தந்தார்.

ஆரம்பத்தில் சில காலம் கல்லூரியில் ஆசிரியராகவும் பின்னர் பொறியியல் துறையிலும் பணியாற்றித் தமது பதவிக்கும் தனக்கும் பெருமையைத் தேடிக் கொண்டார். கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் தலைவராகவும் காப்பாளராகவும் சிறந்து விளங்கினார்.

அன்னாரின் பிரிவு கேட்டு அதிர்ச்சியடைந்த பலரில் யானும் ஒருவன். அண்மையில் கொழும்பில் நடைபெற்ற கல்லூரிப் பழைய மாணவர் சங்கத்தின் உலகளாவிய மாநாட்டில் அவரும் கலந்து கொண்டார். யானும் பங்கு கொண்டேன். நீண்டகால இடைவெளியின் பின்னர் அவரைச் சந்தித்தமையால் எமது உரையாடல் நீண்டது.

அன்னாரின் பிரிவால் வருந்தும் அவர்தம் குடும்பத்தாருக்கு எனது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்போம்.

**ச.விநாயகரத்தினம்**
*ஓய்வுபெற்ற ஆசிரிய ஆலோசகர்,*
*கல்வித் திணைக்களம், யாழ்ப்பாணம்.*
*மகாஜனாக் கல்லூரியின் முன்னாள் ஆசிரியர்.*

*பன்னாலை,*
*தெல்லைப்பழை*
*2009.04.01*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# My Patta & Ammamma

Over the last eighteen years, my Patta has been looking out for me. Every year, without fail' he'd send a birthday card and call me on the day itself. It was one of the certainties of this world. Every time someone we knew go to Sri Lanka he'd make sure that their bag was jammed with the milk toffee and coffee cake. When you spoke to him, he was always calm. Always willing to help and always motivated to learn. He never stagnated and never stopped evolving. Whether it is as a father, as a grandparent, as a friend or as a human being, he was always the one you could trust unconditionally. How do you describe just a person in few words It defies logic. Such a person cannot be "summed up". We may only attempt to describe his greatness, produce a tome worthy of Martin Luther King and fail to do him justice.

Ammamma was one of the most devoted individuals that I know. Not only did she devote herself to Patta her entire life, she also devoted herself to her children and her grandchildren in order to allow us the best of everything she could offer. She spent the best part of eleven years raising my cousins, making sure that they were loved and cared for. This is shown by how they are growing up to be well disciplined young members of society and have values that she helped instil in them for the rest of their lives.

**By: Vaithegan Rajakuladevan**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Our Patta & Ammamma

Patta & Ammamma were the two most loving grandparents a child could ever dream of having. They both were quiet and sweet natured people, who were no doubt appreciated by everyone. They always took a great deal of interest in us grandchildren and showed the kind of love which we all knew was everlasting. On trips to Sri Lanka, Patta took us touring variously designed temples to the exciting elephant rides, to ensure we had the full cultural experience. Ammamma however, would take us to Sari shops sharing her amazing taste in fashion and I can honestly say that all the material she sent me was absolutely divine! But neither of them would settle until they were certain we were happy. Nevertheless most of all we will miss all their cards they would send each year without fail. Even more so their birthday phone calls, which were never a doubt one of the first I always received. But now I know they are in safe hands.

Now Knowing you both can be in a place free of illness and pain and just simply live the humble same life together, always settles my grief. We will without end love you and will always miss you. However, most of all we will forever respect your achievements and for simply being the kind gentle people which anyone could rely on.

**By: Shamethera Rajakuladevan**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Paskaran - A man born to serve

When I met Sivapaskaran for the first time in 1960/61 as a promising young man who was going to get married to my sister Sumithra, his name Paskaran struck me as some what unusual and unique. Though I often wondered as to what this word Paskaran ment it remained a mystery to me for a very long time.

Paskaran was born in Malaysia where his father was serving as a government servant during the Japanese occupation.His father died on board ship when the family was returning to Sri Lanka He had comforted his weeping mother with the promise that he would look after her and his sister and young brothers. The love and affection they bore him right through life was proof that he had fulfilled his promise in ample measure. His word – always softly spoken – was sufficient to settle all issues. I have never seen him speaking harshly to any body. Help ever, hurt never was the motto of his life. Truly Paskaran was an embodiment of the saying " a soft answer turneth away wrath"

He was a religious man in the true sense of that word. His idea of religion was a harmonious blend of devotion, discipline, and dedicated service. Born in the shadow of the Nallur Kandasamy Kovil and living cheek by jowl with the Tirunelveli Sivan Temple, unfortunately I had very little to do with temples. But Paskaran was different. He was a devout practicing Hindu, who served his fellow beings in the true Hindu spirit. Having seen the deep faith that Paskaran had in the Tirunelveli Sivan Temple and his profound devotion to the much respected and



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

saintly priest at that temple, now sitting alone in the silent watches of the night, I do truly imagine the saintly priest of the Tirunelveli Sivan Temple welcoming Paskaran over the great divide into the heavenly abode. Paskaran was an epitome of patience. There have been so many occasions when I have asked him why he did not react angrily when someone tested his patience to the point of exasperation. Always his answer was a benign smile.

Both their daughters living abroad, Paskaran nursed Sumithra through a long debilitating illness, despite his own agony of painfully troubled knees. There was no superficial hugs but their marriage was an embodiment of what a Hindu marriage truly means.

Paskaran was proud of being the president of his school Old Boys Association and was very happy about the scholarships the association had made available to deserving handicapped students. When I argued that the association would have done better to build a laboratory or a workshop- he just smiled! The large and varied attendance at his funeral showed me that while some may leave their legacy in brick and mortar, others leave these in the hearts of their countrymen.

Does the word Paskaran mean a person who renders selfless service? If I were to carve an epitaph for his tombstone, I would say, " He was born – To Serve ".


May Paskaran and Sumithra attain Moksha.

**Ambalavanar Ratnam**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீங்காத நினைவுகள்




அன்னை தந்தை சகோதரர்களுடன் அமரர் சிவபாஸ்கரன்



இலண்டனில் மனைவி மகளுடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பட்டதாரியாக




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




மனைவி மக்களுடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஓர் குடும்ப வைபவம்



கேடயங்கள் பெற்ற வீரனாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





ஓர் கருத்தரங்கில் அமரரின் பேச்சு



பரிசளிப்பு விழாவில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பிரதமவிருந்தினராக




கருத்தரங்கில் பயிற்சி அளிப்பவராக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அலுவலகத்தில் ஆணையாளராக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
*சிவமயம்*

# நன்றி நவில்கின்றோம்

**"வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து"** இறைவன் திருவடி நீழல் எய்திய எங்கள் அன்புத் தந்தை **அமரர். சிவசம்பு சிவபாஸ்கரன் அவர்களினதும் எமது அன்புத் தாய் திருமதி சுமித்திரா சிவபாஸ்கரன் அவர்களினதும்** இறுதிச் சடங்கில் கலந்து கொண்டோருக்கும், உள் நாட்டிலும் வெளிநாட்டிலும் இருந்து தொலைபேசி மூலமும், நேரடியாகவும் தமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்தவர்களுக்கும், மலர்கள், மலர்மாலைகள், மலர்வளையங்கள் வைத்துத் தங்கள் அனுதாபங்களைத் தெரிவித்தவர்களுக்கும், இறுதிவரை எங்களுடன் இருந்து பல உதவிகள் புரிந்தவர்களுக்கும், அந்தியேட்டிக் கிரிகையில் கலந்து கொண்டவர்களுக்கும், இன்று நடைபெறும் வீட்டுக்கிருத்திய கிரிகையிலும் கலந்து அவர் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும், உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும், குறிப்பிட்ட நாட்களுக்குள் இம் மலரினை அச்சிட்டு உதவிய கொழும்பு லக்ஷ்மி அச்சகத்தாருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*



– நன்றி –
*மக்கள், மருமக்கள்,*
*பேரப்பிள்ளைகள்*





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கீதாசாரம்

எது நடந்ததோ, அது நன்றாகவே நடந்தது.
எது நடக்கின்றதோ, அது நன்றாகவே நடக்கின்றது.
எது நடக்க இருக்கின்றதோ, அதுவும் நன்றாகவே நடக்கும்.
உன்னுடையது எதை இழந்தாய்?
எதற்காக நீ அழுகின்றாய்?
எதை நீ கொண்டு வந்தாய், அதை நீ இழப்பதற்கு?
எதை நீ படைத்திருந்தாய், அது வீணாவதற்கு?
எதை நீ எடுத்துக் கொண்டாயோ,
அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.
எதைக் கொடுத்தாயோ
அது இங்கேயே கொடுக்கப்பட்டது.
எது இன்று உன்னுடையதோ,
அது நாளை மற்றொருவருடையதாகின்றது.
மற்றொரு நாள் அது வேறொருவருடையதாகும்.

இதுவே உலக நியதியும்
எனது படைப்பின் சாராம்சமுமாகும்.
-பகவான் ஸ்ரீ கிருஷ்ணர்-



Luxmi Printer Colombo - 13. Tel : 2448545

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org